**தென் மகாண சபை - 2018**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென் மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 14 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வறுமையினை ஒழிக்கும் சுழற்சி நிதியத்தின் ரூபா 39,900,334 தொகையான தேறிய சொத்துக்கள் நிதி நிலைமைக்கூற்றில் முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள போது, மேற்படி நிதியத்தின் ரூபா 2,610,720 தொகையான நிலையான வைப்புத் தொகை மீண்டும் முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் சொத்துக்கள் ரூபா 2,610,720 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இரட்டைக் கணிப்பீடு இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டிற்கு செலவின விடய இலக்கம் 1405 இன் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராத போது, அந்த செலவின விடயத்தின் கீழ் வருடாந்த செலவினம் ரூபா 32,131,855 தொகையான மறைப் பெறுமதியொன்று மற்றும் முற்பணச் செலுத்தல்கள் ரூபா 118,781 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான செலவின விடயத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். செலவின இலக்கம் 1405, 2017 ஆம் ஆண்டின் போது உருவாக்கப்பட்ட செலவின விடயமாகும். 2018 ஆம் ஆண்டில் அந்த செலவின விடயம் இல்லை. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அட்டுறு செலவினம் மற்றும் முற்பணங்கள் காணப்பட்டமையால், 2018 ஆம் ஆண்டின் வருடாந்த செலவினம் எதிர் பெறுமதியொன்றினை கொண்டுள்ளது. 1405 செலவின விடயத்திற்கு பதிலாக இந்த வருடத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | | | அறிமுகப்படுத்தப்பட்ட 1409 செலவின விடயத்திற்கு அந்த செலவினங்களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவுரை வழங்கப்பட்டது. |
| (இ) | கடந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முற்பண கொடுப்பனவாக ரூபா 10,104,545 தொகை கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டின் செலவினங்கள் அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மாகாண திறைசேரியால் சரியான முதன்மை தரவுகள் உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு செலவினங்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். | தலைப்பு இலக்கம் 305 - மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய முற்கொடுப்பனவு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த தொகை உருவாகுவதற்குரிய முதன்மை தரவுகள் மாகாண சுகாதார திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முற்கொடுப்பனவுகளாக ரூபா 80,811,033 தொகை கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினங்கள் இந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | மாகாண நிதியக் கணக்கினை தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் முற்கொடுப்பனவுகள் மற்றும் அட்டுறு கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்களுக்கமைய தலைப்பு இலக்கம் 305 - மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய முன்வைக்கப்பட்டுள்ள இறுதி, முற்கொடுப்பனவுகள் மாகாண நிதியக் கணக்கிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும், தவறுதலாக அட்டுறு கொடுப்பனவுகள் முற்கொடுப்பனவுகளாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சிடம் மீண்டும் வினவி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பமென்பதை தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வருமானக் குறியீட்டு இலக்கம் 1003-01-01 மோட்டார் வாகன அனுமதிப்பத்திர கட்டணங்களுக்குரியதாக முன்னைய ஆண்டு வரையிலும் நிலுவை வருமானம் கணக்கு வைக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை வருமான அறிக்கைகளின் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 1,538,171,385 ஆக இருந்தது. குறித்த நிலுவை வருமானத்தில் ரூபா 722,969,379 தொகை தென் மாகாண நிதி விதி 62 இன் ஏற்பாடுகள் எதனையும் பின்பற்றாது முறையான அடிப்படையொன்றில்லாது கழிக்கப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமானம் ரூபா 815,202,006 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ள 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமான அறிக்கைகளின் பிரகாரம் இந்த பெறுமதி மாகாண நிதியத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலுவை வருமானம் உருவாகியுள்ள விதம் அல்லது அது தொடர்பான எவ்விதமான பகுப்பாய்வும் எமக்கு முன்வைக்கப்பட்டிராததுடன், நிலுவை வருமானத்தை பதிவளிப்பதற்கு அல்லது ஒதுக்குவதற்கு போதியளவான எழுத்துமூல தகவல்கள் எம்மிடம் இல்லாதிருந்தமையால் ஒதுக்கீடோ அல்லது பதிவளிப்போ இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஊ) | நிதியக் கணக்கின் இறுதி மீதியாக தலைப்பு 25 இற்குரியதான ரூபா 50,311,874 தொகையான எழுதுகருவிகள் மற்றும் ஏனைய இருப்புகள் உள்ளடங்கியிருந்த போதிலும், ஒவ்வொரு தலைப்பிற்கும் உரியதாக முன்வைக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் அந்த இருப்புகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்குகளிடையே கொடுக்கல் வாங்கல்களை சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | மாகாண நிதியத்தின் கணக்குகளை தயாரிக்கும் போது தலைப்பு 25 இலும் எழுத்து மூலம் வரவழைக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இறுதி எழுதுகருவிகள் மற்றும் ஏனைய இருப்பின் பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வணிக முற்பணக் கணக்குகள் 4 இன் ரூபா 114,053,444 தொகையான கூட்டு வரவு மீதி 6 வணிக முற்பணக் கணக்குகளின் ரூபா 52,594,135 தொகையான கூட்டுத்தொகையான செலவு மீதியுடன் எதிரீடு செய்யப்பட்டு ரூபா 61,459,309 தொகையான நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டு முதல் வரவு மீதியுள்ள முற்பணக் கணக்குகள் நடைமுறை பொறுப்புகளின் கீழும் செலவு மீதியுள்ள முற்பணக் கணக்குகளை நடைமுறைப் பொறுப்புகளின் கீழும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**1.6.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,486,024,261 தொகையான நிலுவை வருமானங்களை அறவிடுதல் நிச்சயமற்றதென காணப்படும் போதிலுத், அதற்குரிய அறவிடமுடியாக்கடன் பதிவழிப்பொன்று அல்லது ஐயக்கடன் ஒதுக்கீடொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானங்கள் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். குறிப்பு இலக்கம் 12 இல் முன்வைக்கப்படுகின்ற ரூபா 1,486,024,261 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுதல் உயர் நிச்சயமற்ற தன்மையுடன் காணப்படுவதாக எந்தவொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அதற்குரிய அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடொன்று அல்லது பதிவளிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறெனினும், கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி கடந்த வருடங்களின் உண்மையான நிலுவை வருமான பெறுவனவுகளை அடிப்படையாக கொண்டு பெற வேண்டிய வருமானத்தினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 319,062,138 தொகையான தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியில் ரூபா 306,482,670 தொகை 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி மீதிகளை தீர்ப்பதற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். மேலும் தீர்ப்பனவுகளை மேற்கொண்டிராத நிறுவனங்களுக்கு அந்த கட்டுநிதி மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்குகின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வறுமை ஒழிப்பு சுழற்சி நிதியத்திலிருந்நுது அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 37,186,633 தொகையான கடன்பட்டோர் மீதி 25 வருடங்களுக்கும் மேலான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்ததுடன், இந்த மீதியிலிருந்து மீளாய்வாண்டினுள் எவ்விதமான தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். அறவிடப்படாது காணப்படும் சுழற்சி நிதியத்தின் கடன் மீதியை பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையில் நிலவிய ரூபா 60,226,914 தொகையான கடன்பட்டோர் மீதியினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 9,519,974 தொகை மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படும் ரூபா 2,760,717 தொகையான கடன் மீதி நிலவியது. | நீண்ட காலமாக நிலவும் கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு விதைகள் மற்றும் தேயிலைக் கன்று கடன்பட்டோர் எனும் விடயம் தொடர்பில் இது வரையிலும் உரிய தரப்பினருக்கு அதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. பல்வேறு செயற்திட்டங்களிலிருந்து வருவதுடன், இந்த கடன்பட்டோர் மீதி தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கான தகவல்களை ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் தசுண கடன் முன்மொழிவு முறையின் கீழ் வழங்கிய கடன்களிடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் மீதிகள் 20 இற்குரிய நிலுவை கடன் தவணைகள் மற்றும் வட்டி | இந்த கடன் தவணைகள் மற்றும் வட்டி அறவிடுவதற்கு துரிதமான வேலைத்திட்டமொன்று | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் மீதியான ரூபா 1,092,984 தொகையில் இது வரையிலும் ரூபா 454,050 தொகையான பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், |

| | | |
|---|---|---|
| ரூபா 1,092,984 தொகை ஆகும். | நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | எஞ்சிய நிலுவைக் கடன் தவணைகளை அறவிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிரமமாக கடன் தவணைகளை செலுத்தாத நிலுவைக் கடன்பட்டோருக்காக இன்றளவிலும் சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாணத்தின் அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 12,280,690 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் ரூபா 283,555 பெறுமதியான கடன்கொடுத்தோர் தொடர்பில் விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் தொடர்பில் விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட வேண்டும். | இந்த கடன்பட்டோர் மீதி தொடர்பில் மேற்படி நடவடிக்கைகள் எடுப்பதற்காக தகவல்களை ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

**கணக்காய்வு அவதானிப்புகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | (i). தலைமை செயலகத்தின் மற்றும் கல்வித் திணைக்களத்தின் 10 உத்தியோகத்தர்களின் மாதாந்த | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எழுந்திருந்த பிரச்சினைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், நிலுவையான பணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சம்பளத்தினை அடிப்படையாக கொண்டு உழைக்கும் போது செலுத்தும் வரி ரூபா 137,478 தொகை குறைவாக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | தவணைகளாக அறவிடப்பட்டவாறு உள்ளது. |
| | | (ii). உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்களின் சேவை வருமானத்தை கணப்பிடும் போது எரிபொருள் படிகள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மாகாண சபை நிதி விதி இலக்கம் 283.4 | 04 நிறுவனங்களின் 14 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 4,788,520 தொகையான 113 காசோலைகள் தொடர்பில் மாகாண சபைகளின் நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபை நிதி விதி இலக்கம் 283.4 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய பொது வைப்பு மீதிகளை அரச வருமாத்திற்கு எடுப்பதற்கு | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 06 நிறுவனங்களுக்குரிய ரூபா 22,644,417 தொகையான பொது வைப்புகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | 2017 நவம்பர் 28 ஆந் திகதிய 29/2017 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 02(i) பந்தி | ஹபராதுவ தொகுதி கல்வி அலுவலகத்தின் கீழ் சேவையாற்றும் பாடசாலை காவலாளியொருவர் வாரத்தில் சேவையில் ஈடுபட வேண்டிய நாட்களின் எண்ணிக்கையை விட குறைவாக சேவையில் ஈடுபட்டமையால் அவர் வேவையாற்றிய 22 வருடங்கள் 09 மாதங்கள் சேவைக் காலத்திற்காக ரூபா 645,836 தொகை கூடுதலக செலுத்தப்பட்டிருந்தது. | 2017 நவம்பர் 28 ஆந் திகதிய 29/2017 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாறு முறையற்ற பாவனைக்குட்பட்டிருந்த தொகை 2019 ஆம் ஆண்டின் சனவரி முதற் பகுதியிலிருந்து அவரின் சம்பளத்திலிருந்து அறவிடுவததற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (உ) | 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | தென் மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தின் மிகை ஊழிய அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவர் கடமை நிறைவேற்றல் அடிப்படையில் அந்த தரத்தின் முதலாம் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கடமை நிறைவேற்றல் படியினை செலுத்துவதற்கு தென் மாகாண கல்விச் செயலாளர் அங்கீகாரமளித்துள்ளமையால் அந்த உத்தியோகத்தருக்கு அந்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வகுப்பில் பதவியொன்றில் (எல்பிட்டி வலய கல்வி பணிப்பாளராக) நியமிக்கப்பட்டமையால் 2014 செப்தம்பர் முதல் 2018 செப்தம்பர் வரையிலும் ரூபா 445,726 தொகையான கடமை நிறைவேற்றல் படியொன்றும் தொலைபேசி படியும் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3 ஆம் அத்தியாயத்திலிருந்து 8 ஆம் அத்தியாயம் வரை | காலி வலயத்தின் 2 பாடசாலைகளால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக செயற்பட்டு ரூபா 4,072,212 தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய அனைத்து கொள்வனவுகளும் உரிய நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதென அறியத்தருகின்றேன். |

## 1.6.5 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் செய்திகள் அமைச்சினால் பெறுமதி சேர் வரி (VAT) பதிவு இரத்துச் செய்யப்பட்ட 03 ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,343,393 தொகையான வற் வரித் தொகையொன்று உடனடியாக மீள அறவிடப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு அறிவிக்குமாறு 2017 ஒக்தோபர் 07 ஆந் திகதி | அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளைக்கமைய செயற்பட வேண்டும். | தற்போது செலுத்தாததாக எஞ்சியுள்ள ரூபா 706,231 தொகை தொடர்பில் பதில் வழங்கப்பட்டிராமையால் சட்ட ஆலோசனைகளை பெற்று மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன். |

இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.** நிதி மீளாய்வு

----------------------

நிதி விளைவுகள்

----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறானது ரூபா 585,671,505 ஆன மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீள சீராக்கப்பட்ட மிகையானது ரூபா 422,079,412 ஆகும். மீளாய்வாண்டின் நிலுவை வருமானமாக ரூபா 658,135,478 தொகை கணக்கு வைக்கப்பட்டமை மற்றும் முற்பணங்களான ரூபா 80,811,033 தொகை கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டமை செயற்பாட்டு விளைவிலான மிகைக்காக தாக்கம் செலுத்தியிருந்தது.

3. **வருமான முகாமைத்துவம்**

**---------------------------------**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளிலும் மாகாண சபையால் சேகரிக்கப்பட்டிருந்த வரி மற்றும் வரியல்லாத வருமானம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு. | வரியல்லாத வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். | மாகாண வருமானத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் வரி வருமானம் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பதற்கு சேகரிக்கப்படும் வரி தொடர்பில் மக்கள் அறிந்திருத்தல் பிரதான காரணமாகும். |

| **வருமான வகை** | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| வரி வருமானம் | 8,184 | 7,724 | 6,440 | 5,654 | 4,864 |
| வரியல்லாத வருமானம் | 988 | 1,068 | 789 | 650 | 546 |
| **மொத்தம்** | 9,172 | 8,792 | 7,229 | 6,304 | 5,410 |

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 460 மில்லியனால் அல்லது 6 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், வரியல்லாத வருமானம் ரூபா 80 மில்லியனால் அல்லது 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது..

**(ஆ) நிலுவை வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஆதன ஒப்படைப்புகளின் அடிப்படையிலான முத்திரை வரி ரூபா 595.07 மில்லியனாக தொன் மாகாண சபை நிதியக் கணக்கிற்கு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது அதற்குரிய நிலுவை வருமானத்தின் 12.01 சதவீதம் அறவிடும் போது 25.12 சதவீதம் விடுவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் வருமானம் சேகரித்தலின் அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும், மருந்துப்பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்களுக்கான வரி தொடர்பில் சேகரிப்பு வீதத்தில் குறைவொன்றினை காணக்கூடியதாக இருந்ததாக மாகாண வருமான ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நிலுவை வரி வருமானத்தினை அறவிடும் சதவீதம் 3 முதல் 24 வரையிலுமான மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | - மேற்படி - | |
| (iii) | முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக மருந்து விற்பனையாளர்களை பதிவு செய்யும் கட்டணம் மற்றும் கனிய உரித்துக்கள் மீதான வரிகளுக்குரிய மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் முறையே 53 சதவீதம் மற்றும் 26 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | - மேற்படி - | |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 அரச மானியம்

மீளாய்வாண்டிற்குரியதாக மாகாணத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக கிடைத்திருந்த அரசாங்க

மானியங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு பின்வருமாறு ஆகும்.

| நிதி மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | செலவிடப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | குறைப்பயன்பாடு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடைகள் (PSDG) | 2,130.22 | 1,544.52 | 585.70 |
| கருதுகோள் அடிப்படையிலான நன்கொடைகள் (CBG) | 983.71 | 822.37 | 161.34 |
| கல்வித்துறை அபிவிருத்தி திட்டம் (TSEP) | 214.28 | 212.92 | 1.36 |
| இரண்டாம் சுகாதாரத்துறை அபிவிருத்தி திட்டம் (HSDP) | 558.80 | 299.40 | 259.40 |

**4.1.2**

**மாகாண அபிவிருத்தி திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பணிகள் மற்றும் குறைவேலை ஆகியவற்றுக்காக ரூபா 3,117.78 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய 2064 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலை முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

தென் மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தென் மாகாண திட்டமிடல் செயலகத்தினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

உரிய காலப்பகுதியினுள் மதிப்பீடுகளை தயாரிக்க முடியாமை மற்றும் உரிய காலத்தில் நிதியேற்பாடுகள் கிடைக்காமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியாதிருந்ததாக உரிய அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதி தலைமை செயலாளர் (திட்டமிடல் மற்றும் மேவுகை) இனால் குறிப்பிடப்பட்டுள்ளது.

| விபரம் | புதிய பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்படாத முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | (ரூபா மில்லியன்) |
| முழுமையாக நிறைவு செய்யப்பட்ட | 1544 | 302 | 1846 | 2,244.37 |
| 50% இனை விட அதிகமாக நிறைவு செய்யப்பட்ட | 86 | 9 | 95 | 562.73 |
| 50% இனை விட குறைவாக செய்யப்பட்ட | 70 | 3 | 73 | 173.11 |
| ஆரம்பிக்கப்பட்டிராத | 50 | 0 | 50 | 137.57 |

கல்வித்துறை அபிவிருத்தி திட்டம் (TESP), இரண்டாம் சுகாதாரத்துறை அபிவிருத்தி திட்டம் (HSDP) மற்றும் அண்மிய பாடசாலை திறந்த பாடசாலை செயற்திட்டத்திற்குரியதாக மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் மாகாண திட்டமிடல் செயலாற்றினால் மேற்பார்வை செய்யப்பட்டிராததுடன், அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் மேற்படி குறிப்பினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தென்மாகாண பாடசாலைகளின் சுத்தகரிப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 155,000,000 தொகையான நிதி ஒதுக்கீட்டில் 2019 சனவரி 18 ஆந் திகதி வரையிலும், ரூபா 15,898,361 தொகை கிடைத்திராததுடன், செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 30 | பணம் வழங்கப்படாத செயற்திட்டங்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். | பணிகளை நிறைவு செய்வதற்குள் 23 பாடசாலைகளில் 14 பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் பணம் பெறவேண்டியதாக உள்ளதுடன், கல்வி அமைச்சின் பிரதம கணக்காளருக்கு அது தொடர்பில் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. அந்த பணம் கிடைத்தவுடன் பாடசாலைகளுக்கு பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும், பணம் கிடைக்கவுள்ள பணிகள் நிறைவு செய்யப்படாத 14 பாடசாலைகள் மற்றும் மொத்தப் பணமும் பெற்றுக்கொள்ளப்பட்டு பணிகளை நிறைவு செய்யும் செயன்முன்னேற்றம் 60 |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அத்திகதியில் பணிகள் நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள் 24 ஆகும். | | சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பாடசாலைகள் 09 உள்ளன. |
| (ஆ) | கா/ரதனசிறி ராஜகீய பாடசாலையின் முதலாம் தரம் நடாத்திச் செல்லப்படும் பிரதான நுழைவாயிலின் அருகில் அமைந்துள்ள கட்டிடத்தின் அருகில் மண்ணுடன் பாரிய கல்லொன்று வீழ்ந்திருந்ததுடன், மண் சுவருக்கு மேலே காணப்பட்ட உடைந்த நிலையில் கைவிடப்பட்டிருந்த கட்டிடமும் மிகவும் அபாயமானதென தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனதினால் பரிந்துரை வழங்கப்பட்டுள்ள போது முதலாம் தரத்தின் கற்பித்தல் நடவடிக்கைகள் அந்த கட்டிடத்தினுள்ளேயே மேற்கொள்ளப்பட்டவாறு இருந்தது. | தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரைக்க மைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்வி அமைச்சினால் அந்த பணம் வழங்கப்பட்டவுடன் பாடசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தென் மாகாண கல்வி பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | தென் மாகாண சபையின் 1995 இன் 1 ஆம் இலக்க தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை கட்டளைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் 7(1), (2) மற்றும் (3) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் பல வருடடங்களாக 6 அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையான 15 பேரில் 6 பேர் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவம் செய்யாததுடன், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த 14 பணிப்பாளர் சபை | அதிகாரசபையை நிறுவுவதற்கு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் சபைக்கு இந்த அனைத்து உத்தியோகத்தர்களையும் நியமிப்பதற்காக தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை முயற்சி எடுத்திருந்த போதிலும், அதன் அனைத்து உத்தியோகத்தர்களினதும் பங்குபற்றல் குறைவான மட்டத்தில் நிலவியது. |

கூட்டங்களுக்காக பணிப்பாளர் சபையின் ஐந்து உத்தியோகத்தர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர்.

4.3 **செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண சபையின் 2009 இன் 1 ஆம் இலக்க தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை (திருத்தப்பட்ட) கட்டளைச்சட்டத்தின 11 ஆம் பிரிவின் கீழ் 2012 செப்தம்பர் 26 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1777/39 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2012 இன் 01 ஆம் இலக்க முற்சக்கரவண்டி பயணிகள் போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் மற்றும் 2012 இன் 2 ஆம் இலக்க பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2012 இன் 01 ஆம் இலக்க முற்சக்கரவண்டி பயணிகள் போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் மற்றும் 2012 இன் 2 ஆம் இலக்க பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதற்குரிய தேசிய கொள்கையை வடிவமைக்காது அந்த நிலைமையை சீர்ப்படுத்த இயலாது. |
| (ஆ) | 3 கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரங்களின் கீழ் அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவினுள் மேங்கொள்ளப்பட்டிருந்த அகழ்வு பணிகளின் போது அகழ்வு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூகோள இட அமைவு (GPS) தொகுதி இலக்கம் மற்றும் தளப் பரிசோதனையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட GPS தொகுதி இலக்கம் ஆகியவற்றுக்கிடையே பாரிய வீச்சிலான வேறுபாடுகள் காணப்பட்டன. அவற்றுள் ஒரு கற்குவாரிக்காக பிரதேச | அனுமதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளை மீறும் வகையில் செயற்படல் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளருக்கு விரிவான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு புவியியல் ஆராய்சிகள் மற்றும் அகழ்வுப் பணியகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான பதில் கிடைத்த பின்னர் முழுமையான அறிக்கையொன்றினை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

செயலாளரினால் அங்கீகாரமளிக்கப்பட்டிருந்த பரப்பளவு 1.5 ஏக்கர் எல்லையினை விஞ்சி 3.2 ஏக்கர் அளவான நிலப்பரப்பில் அத்துமீறிய முறையில் கருங்கற்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்தன. கணக்காய்வினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுபடுத்தல்களுக்கமைய அவ்வாறு அத்துமீறிய முறையில் உடைத்து அகற்றகப்பட்டிருந்த கருங்கற்களின் அளவானது 31,772 கியூப்களாவதுடன், அதன் சந்தைப் பெறுமதி ரூபா 47,658,000 ஆகும். அவ்வாறே, அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கமைய காணியின் எல்லையை சுற்றிலும் 5 மீட்டர்கள் அளவான நிலப்பகுதி அகழ்வுகளிலிருந்து கைவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. கற்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்த ஒரு கற்குவாரியின் ஆளமானது அனுமதிப்பத்திர் நிபந்தனைகள் மீறும் வகையில் 14.5 மீட்டர்கள் வரை பரந்து காணப்பட்டதுடன், அந்த நிலமும் சரிவொன்றின் தன்மையுடன் மிகவும் அபாயகரமான நிலையில் காணப்பட்டது. மேலும், கற்கள் உடைத்து அகற்றப்பட்ட கற்குவாரிகள் பின்னர் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையால் நீர் நிறைந்து பாதுகாப்பற்று காணப்பட்டது.

## 4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வக்வெல்ல முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் முறையே பிரதி தலைமை செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) மற்றும் பணிப்பாளர் பதவியின் நிரந்தர கடமையாகும். எவ்வாறெனினும், அந்த நிரந்தர கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதி தலைமை செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) மற்றும் பணிப்பாளர் ஆகியோருக்கு ரூபா 567,000 படி ரூபா 1,134,000 தொகையான மேலதிக படியொன்று மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தென் மாகாண ஆளுநரின் செயலாளரின் 2017 மே 29 ஆந் திகதிய G/SP/6/8-4 ஆம் இலக்க கடிதத்தின் நிபந்தனைகளுக்கமையாத வகையில் பிரதி தலைமை செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) மற்றும் பணிப்பாளருக்கு மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 424,687 மற்றும் ரூபா 149,857 தொகையான படிகள் மற்றும் விடுமுறை சம்பளம் ஆகியன செலுத்தப்பட்டிருந்தன. | நிரந்தர கடமைகளுக்காக செலுத்தப்படும் மேலதிக படிகள் சட்டரீதியானவை அல்லாமையால் மீள அறவிடப்பட வேண்டும். | பயிற்சி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் பிரதி தலைமை செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) மற்றும் பணிப்பாளர் பதவியின் நிரந்தர கடமையான போதிலும், தென் மமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனம் இலாபமீட்டும் நிறுவனமொன்றாகையால் மேற்பார்வைக் கட்டணங்கள் ஆளுநரின் செயலாளரின் 2011.07.06 ஆந் திகதிய கடிதம் மற்றும், ஆளுநரின் செயலாளரின் 29/05/2017 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் மதிப்பிற்குரிய ஆளுநர்களின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படும். மேலும், இந்த கொடுப்பனவு ஏனைய மாகாண சபைகளின் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்தும் ஏனைய நிறுவனங்களில் 1991 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்படுகின்றது. |
| (ஆ) | லபுதுவ பண்ணை முற்பணக் கணக்கின் எடுகோள் கட்டண சீராக்கங்களின் பின்னர் ரூபா 25,677,041 தொகையான முன்னைய ஆண்டின் தேறிய நட்டம் அமைச்சரவையின் பிரமாணக் குறிப்பில் தவறுதலாக ரூபா 14,259,304 ஆக தேறிய இலாபமாக குறிப்பிட்டு, அந்த தேறிய இலாபத்தில் ரூபா 1,425,861 | அறவிடப்படாத அனைத்து பணமும் அறவிடப்பட வேண்டும். | விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ரூபா 396,741 தொகையான பணத்தில் இது வரையிலும் அறவிடப்பட்டுள்ள ஊக்குவிப்பு கொடுப்பனவு தொகை ரூபா 220,246 ஆவதுடன், எஞ்சிய ரூபா 176,495 தொகையான பணத்தை அறவிடுவதற்குரிய நினைவூட்டல் கடிதங்கள் மற்றும் தவணைகளாக அறவிடுவதற்கு குறித்த கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது 108 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. 7 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பெற்றுக்கொண்டிருந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒரே தடவையில் மீள செலுத்தப்பட்டிருந்ததுடன், 62 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை தவணை முறையில் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 39 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 396,741 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வெலிப்பிட்டிய நெச்சுரல் பார்க் எனும் பெயருடைய தனியார் ஒருவருக்குரிய காணியொன்றனை ஏலமிடும் போது ஏலதாரரால் மின்சாரம் மற்றும் நீர் விநியோகித்து காணியை ஏலமிட வேண்டிய போதிலும், அந்த ஏலமிடப்பட்ட காணிக்கு மின்சாரத்தினை பெற்றுக்கொடுப்பதற்காக மீளர்வாண்டின் யூன் 21 ஆந் திகதி கடற்றொழில் அமைச்சினால் ரூபா 1,674,654 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சினால் செலுத்தப்பட்ட பணம் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | பிரதேசத்தில் மின்சாரமில்லாத சில குடும்பங்கள் இனங்காணப்பட்டு அமைச்சினூடாக முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது இந்த நலனாளிகளை இனங்காணக்கூடியதாக இருந்தது. இது வரையிலும் இந்த காணிகளை கொள்வனவு செய்த நபர்கள் இங்கு குடியேறியுள்ளதாகவும், அஅந்த நபர்களால் விடயத்திற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையொன்றின் மூலம் அவர்கள் நலனாளிகளாக இனங்காணப்பட்டு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் மாகாண அபிவிருத்தி திட்டம் அமைச்சர் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாகாண கல்வி அமைச்சினால் ரூபா 7,693,534 தொகை செலவிடப்பட்டிருந்தது. குறித்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமையாமை, பாடசாலைகளுக்காக பொருட்களை கொள்வனவு செய்யும் போது விடயத்திற்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவரின் கண்காணிப்பின் பின்னர் தேவைகளை இனங்காணாமை, கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பதிவு செய்யப்படாமை, | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமையாமை செயற்பட வேண்டியதுடன் , பொருட்களை பதிவு செய்தல், தேவைப்பாடுகளை இனங்காணல் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மனிதவளங்கள் காணப்படும் மற்றும் நிதி விடுவிக்கும் நிறுவனங்களுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டங்களை பன்முகப்படுத்தல் மூலம் இந்த நிலைமை குறைவடைவதுடன், எதிர்வரும் காலங்களில் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளளேன். |

பகிர்ந்தளிப்பு பட்டியல் / பங்களிப்பு பெயர்ப்பட்டியல் கோவைகளுக்கு உள்ளடக்கப்படாமை போன்ற சட்டரீதியான தேவைப்பாடுகளிலிருந்து விலகி முறையற்ற விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய தொல்பொருளியல் திணைக்களத்தின் தொல்பொருளியல் உதவியாளராக சேவையில் ஈடுபட்டிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் அந்த சேவையிலிருந்து நீங்கி அல்லது தற்காலிகமாக விடுவிக்கப்படாது முன்னாள் ஆளுநரின் தனிப்பட்ட பதவியணிக்கு 2012 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் 2015 சனவரி மாதம் வரையிலும் சேவையாற்றியதாக போலியான தகவல்களை வழங்கி சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 760,368 கூட்டுத்தொகை ஆளுனர் செயலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்ததுடன், மேற்படி காலப்பகுதிக்காக தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திடமிருந்தும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 733,267 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டுள்ள பணம் உடனடியாக அறவிடப்பட வேண்டியதுடன், சம்பளம் செலுத்தும் போது மாகாண நிதி விதிகளுக்கமைய செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். இந்த உத்தியோகத்தரிடமிருந்து இது வரையிலும் ரூபா 50,000 அறிவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பணத்தையும் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆயுர்வேத திணைக்களத்தின் கெப் வண்டியொன்று கடந்த வருடத்தின் மே மாதம் 03 ஆந் திகதி வேன் வண்டியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அதன் போது வேனுக்கு ஏற்பட்ட சேதத்திற்காக ரூபா 100,000 தொகை கெப் வண்டியின் சாரதியின் தனிப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் கெப் வண்டி அபருக்க மருத்துவமனையில் அமைந்துள்ள பலா மரமொன்றில் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக போலியான தகவல்கள் குறிப்பிடப்பட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 108,975 தொகையான காப்பீட்டுத் தொகை பெறப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்படி விபத்து தொடர்பில் மாகாண நிதி விதி 54 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி விதி 54 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப விசாரணையை மேற்கொண்டு குறித்த சாரதி குற்றவாளியாக குற்றச்சாட்டு பத்திரம் தயாரிக்கப்பட்டு ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை சாரதியால் மீள செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ரூபா 108,975 தொகையை 06 தவணைகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் 2008 முதல் 2016 வரையான வருடங்களில் அகில இலங்கை பாடசாலைகளுக்கான நடனம் மற்றும் அச்சீட்டு நாடகங்கள் போட்டி மற்றும் தென் மாகாண சங்கீதம் மற்றும் நாடகம் போட்டிகளுக்கு தேவையான அளவினை மிகைத்து 4691 சான்றிதழ்கள் கூடுதலாக அச்சிடப்பட்டிருந்ததுடன், அவற்றின் பெறுமதி ரூபா 122,742 ஆகும். | உரிய திட்டமிடலின பின்னர் தேவையான எண்ணிக்கையான சான்றிதழ்கள் அச்சிடப்பட வேண்டும். | உரிய முறையில் திட்டமிடப்படாமையால் இவ்வாறு அதிகளவிலான சான்றிதழ்களை அச்சிடுவதற்கு நேர்ந்துள்ளது. |
| (ஆ) | மீன்பிடி, விலங்கின உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடடல் விவகார, கிராமியக் கைத்தொழில், மின்வலு மற்றும் | அரசின் நிதியுடன் மேற்கொள்ளப்படு கின்ற செயற்திட்டங்களி | இந்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது விளையாட்டு மைதானத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் மற்றும் பௌதீக அபிவிருத்திக்குரிய பணிகள் |

| | | | |
|---|---|---|---|
| | கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் ஹ/இஹல பெலிகல்ல மஹா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக மின் வெளிச்சத்தினை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் ஒக்தோபர் 08 ஆந் திகதி ரூபா 1,388,159 தொகை பெலிஅத்த பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. பாடசாலை மாணவர்களை தொற்றாத நோய்களுக்கு உள்ளாவதனை தடுப்பதற்கு இரவு நேரங்களில் விளையாட்டுகளில் ஈடுபடுத்தும் நோக்கில் குறித்த பாடசாலைக்கு மேற்படி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், விளையாட்டு மைதானம் குறித்த பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ன் உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த அமைச்சினூடாக நிறைவேற்றப்படாததுடன், மின்சாரக் கட்டமைப்பினை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மின்வலு விடயத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தலுத்த மாதிரி பாற் பண்ணையொன்றினை தாபிப்பதற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக ரூபா 9,568,924 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், பண்ணையை மிகவும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவததற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், பண்ணையில் தற்போதுள்ள 05 மாடுகளை பராமரித்தல் சிரமமானதாகையால் மற்றுமொரு பண்ணைக்கு எடுத்து செல்லுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ள போது 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மேலும் ரூபா 500,000 பெறுமதியான 05 பாற் பசுக்கள் பண்ணைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | செலவினம் மேற்கொள்ள முன்னர் அது தொடர்பில் பெற்றுக்கொள்ளக்கூடிய நலன்களை பரிசோதிக்க வேண்டும். அவ்வாறல்லாத பணிகளுக்காக செலவினம் மேற்கொள்ளாதிருக்க பொறுப்பாக இருத்தல் வேண்டும். | பொருத்தமான வேலைத்திட்டமொன்றில்லாது தனியார் முயற்சியாளர் ஒருவருக்கு ஒப்படைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாது. |

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பொருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சினால் 659 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்யும் பணிக்காக ரூபா 2,998,372 தொகையான செலவினம் மேற்கொள்ளும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்காமை பெறுகைகள் குழுவினதும் மற்றும் தொழில்நுட்ப மதிபாய்வு குழுவின் உத்தியோகத்தர்களின் சிரத்தையின்மை மற்றும் அரச வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை தொடர்பில் கவனம் செலுத்தப்படாமையால் ரூபா 1,057,572 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | சிரத்தையின்றி செயற்பட்ட உத்தியோகத்தர் கள் தொடர்பில் தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காசோலை வழங்குநருக்கு கையளிக்கப்படடிராததுடன், அந்த பணம் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் மார்ச் 24 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த மாகாண கல்வி அமைச்சிற்குரிய கெப் வண்டியொன்றின் பழுதுபார்த்தல் செலவினம், வாகனங்களை ஏற்றிச்செல்லும் கட்டணங்கள் மற்றும் 25 சதவீதமான திணைக்கள கட்டணங்கள் உள்ளடங்களான ரூபா 1,629,359 தொகையான மொத்த நட்டம் அவற்றிற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுமாறு கல்வி அமைச்சின் செயலாளரினால் 2019 மார்ச் 22 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டம் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந் து அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் மே அமாதம் முதல் தவணைகளாக சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தென் மாகாண சபையின் அமைச்சு / திணைக்களம் மற்றும் அலுவலகங்களுக்குரிய தீர்க்கப்படாதுள்ள 100 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 16,985,578 தொகையான வாகன விபத்துக்கள் தொடர்பிலான சேதங்கள், 06 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,381,468 தொகையான ஆதன நட்டங்கள் மற்றும் ரூபா 1,837,095 தொகையான நிதி மோசடியொன்று உள்ளடங்களான மொத்த நட்டங்களின் பெறுமதி ரூபா 20,204,141 ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | பிரதான அமைச்சினால் வறுமையினை குறைத்தல் மற்றும் விசேட தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலின் கீழ் உள்ளுராட்சி நிறுவனங்களுக்காக 04 நீர் தாங்கிகளை கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரைகளை கவனத்திற்கொள்ளாது பெறுகைகள் குழுவினால் குறித்த கொள்வனவுகளை மேற்கொண்டமையால் ரூபா 9,632,000 தொகை கூடுதலாக செலுத்த நேர்ந்திருந்தது. | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள 2 பரிந்துரைகளில் ஒரு பரிந்துரை இந்திய தொழில்நுட்பத்துடன் காணப்பட்டமையாலும், மற்றைய பரிந்துரை நிதியேற்பாட்டு எல்லையை விஞ்சுகின்றமையாலும், நிராகரிப்பதற்கு பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் பரிந்துரைக்கப்படாத நிறுவனமொன்றிலிருந்து 04 நீர்த்தாங்கிகளை கொள்வனவு செய்வதற்குபெறுகைகள் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

## 4.8 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி, கலாச்சார மற்றும் கலை விவகார சமூக நலன்புரி, காப்பகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகார, மனைப்பொருளியல் | ஒப்பந்ததாரரை கறுப்பு பட்டியல்படுத்த வேண்டியதுடன், மேலதிக கொடுப்பனவுகளை அறவிட வேண்டும். | மதிப்பீட்டிற்காக அளவிடைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. போலியாக பிணைமுறிகளை சமர்ப்பித்ததாக ஒப்பந்ததாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால், ஒப்பந்ததாரரை கறுப்பு பட்டியல்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் அளவிடைப் பத்திரத்தின் குறைபாடுகள் காரணமாக கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 240,548 தொகையான பணம் ஒப்பந்தத்தின் பிடிகாசில் கழிப்பதற்கு |

மேம்படுத்தல், வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் ஆளனி மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் நிர்வகிக்கப்படும் சந்தலிய கலாச்சார நிலையத்தினை பழுதுபார்க்கும் செயற்திட்டம், காலி மாவட்ட செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தயாரித்த மாவட்ட பொறியியளாலரின் திகதியற்ற பரிந்துரையுடன் ரூபா 2,598,802 தொகையான மதிப்பீட்டின் பிரகாரம் தனிப்பட்ட ஒப்பந்ததாரரொருவருக்கு 2018 நவம்பர் 19 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த மதிப்பீட்டினை தயாரிப்பதற்காக அளவிடைப் பத்திரம் (Quantity Taking Off Sheet) தயாரிக்கப்படிராமையால் இது முறையான மதிப்பீடொன்றல்ல. ஒப்பந்ததாரரால் முன்வைக்கப்பட்டிருந்த விலைக்கேள்வி பிணைப்பொறுப்பு (Bid Guarantee) மற்றும் செயலாற்றல் பிணையும் போலியானவை என்பதுடன், இந்த நிர்மாண நடவடிக்கைகளின் போது 05 வேலை விடயங்களுக்காக ரூபா 240,548 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) எல்பிட்டிய மக்கள் விளையாட்டுத்

| | | | |
|---|---|---|---|
| | திடலினை நிரமாணித்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | |
| (i) | வேலை விடய இலக்கம் B – 2 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தரத்திலான மண் விநியோகிக்கப்பட வேண்டியதுடன், (Approved Quality soil supplying and pilling) விளையாட்டரங்கிற்கு விநியோகிக்கப்பட்ட மண்ணில் இருக்க வேண்டிய கற்களின் ஆகக்கூடிய அளவானது மி.மி. 37.5 ஆகும். எனினும், விநியோகிக்கப்பட்டு பரப்பப்பட்ட மண்ணில் 1 ½ அடி அளவுடைய கற்களும் காணப்பட்டன. அதற்கமைய உரிய தரமற்ற மண் விநியோகிக்கப்பட்டுள்ள போது அது தொடர்பில் கவனத்திற் கொள்ளாது வழங்குநருக்கு ரூபா 3,354,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் விநியோகிக்கப்பட்ட மண்ணில் உள்ள கற்களுக்காக 75 மீட்டர்கள் கன அளவான மண் குறைத்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது சரியான நடைமுறையல்ல. | மதிப்பிடப்பட்டவாறு உரிய தரத்திலான பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | மண் தொடர்பான இறுதி ஆய்வுகூட அறிக்கையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | இயந்திரங்கள் மூலம் மண் பரப்புவதற்காக குறைவான கூறுவிலைகள் உள்ள போது, ஊழியர்களை ஈடுபடுத்தி மண் | நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் சிக்கனமாகவும் கூறுவிலைகள் தயாரிக்கப்பட | மண் பரப்பப்படல் மேற்கொள்ளப்பட வேண்டியது இயந்திரங்கள் மூலமாகவா அல்லது ஊழியர்கள் மூலமாகவா என்புது மதிப்பீட்டின் வேலை விபரத்தில் உள்ளடக்கப்பட்டிராமையால், அந்த பணிக்காக ஒப்பந்ததாரர் ன்வைக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | பரப்புவதற்காக கூடுதலான கூறுவிலைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் மாகாண சபைக்கு ரூபா 956,535 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | வேண்டியதுடன், மாகாண சபைக்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட வேண்டும். | கூறுவிலைகளுக்கமைய பணி நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றாகும். |
| (iii) | ஆற்று மணலுக்கு பதிலாக முறையான அங்கீகாரமின்றி கடல் மணல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய 200 மீட்டர் மணல் கியூப்களுக்காக 1 மீட்டர் கீயூபிற்கு ரூபா 3,998 படி ரூபா 799,600 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 3 ஆந் திகதிய ருஹுனு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினால் இது தொடர்பில் வழங்கப்பட்டிருந்த பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கடல் மணலை இடுவதற்கு முன்னர் எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்த துணிக்கையான மணல் இடப்பட்டமையால் நீண்ட காலமாக நீர் விநியோக கட்டமைப்பு செயலற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பரிசோதனையென்று மற்றும் அங்கீகாரமொன்றில்லாது மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக கூடுதலாக செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்பட வேண்டும். இவ்வாறான முறைகேடுகளை குறைப்பதற்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆற்று மணல் பற்றாக்குறையானமையால் ஒப்பந்ததாரரால் கடல் மணல் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | போக்குவரத்து மற்றும் சிவில் சேவைகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத பாதை செயற்திட்டத்தின் ரூபா 35,381,059 தொகையான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாத்தறை மாவட்ட | இந்த செயற்திட்டத்தின் பணிகளை மேற்பார்வை செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் | ஆரம்ப விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| | செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட பேருவலை பிரதேசத்தின் 03 கால்வாய்களின் புதுப்பித்தல் பணிகள் தொடர்பிலான கண்காணிப்பு மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பொறியியளாலர் மற்றும் திக்வெல்ல பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது நிறைவேற்றப்பட்ட பணிகள், உரிய தரத்திற்கு நிறைவேற்றப்படாத பணிகள், தவறான அளவீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் முறையான அங்கீகாரமின்றி நிறைவேற்றப்பட்ட வெளிவாரி மற்றும் மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவுகளை பரிந்துரை செய்தல் போன்ற பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கமைய இந்த செயற்திட்டத்தின் பணிகளை மேற்பார்வை செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரினால் குறித்த கணக்காய்வு ஐயவினாவின் பிரதியொன்று தென் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு 2018 மார்ச் 27 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ள போதிலும், உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான ஆரம்ப விசாரணைகள் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் | மதிப்பீட்டின் பணி நிறைவு செய்யப்பட்டு 02 பிரகாரம் உரிய வருடங்களின் பின்னர் மீண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | துறைவாரியான செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்ட கட்டுவன பிரதேச சபைக்குரிய பேரூந்து தரிப்பிடத்தினை புதுப்பிக்கும் மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் U - 02 இன் கீழான 200x75x80 மில்லி மீட்டர் அளவான கொன்கிறீட் அச்சுக் கற்களுக்கு பதிலாக 222x111x80 மில்லி மீட்டர் அளவான கொன்கிறீட் கற்கள் பதிக்கப்பட்டுள்ள போது அது தொடர்பில் கவனம் செலுத்தாது மற்றும் குறித்த கொன்கிறீட் அச்சுக் கற்களின் சக்தி தொடர்பில் பரிசோதனை அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாது ரூபா 2,452,808 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பிலான கணக்காய்வு ஐயவினாவொன்று உள்ள போது அது தொடர்பில் கவனம் செலுத்தாது ஒப்பந்ததாரர்களுக்கு பிடிகாசும் செலுத்தப்பட்டிருந்தது. 2018 சனவரி 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட இரசாயன ஆய்வுகூட பரிசோதனைகளுக்கமைய இந்த கொன்கிறீட் அச்சுக்கற்கள் நிமயமத்திற்கு அமையவானதல்ல என உறுதிப்படுத்தப்பட்டது. | நியமத்திற்கமைவ ான பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | மாதிரிகள் வருவிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதாகவும், இது வரையிலும் பேரூந்து நிலையத்திலுள்ள அச்சுக்கற்கள் எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகியிருக்கவில்லை. |
| (உ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக 2014 ஆம் ஆண்டின் போது மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் மாத்தறை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ரூபா 35,721,029 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட தெய்யந்தர ஆரம்ப பாடசாலைக்கான கட்டிடங்களை பொறுப்பேற்றல் மாகாண கல்வி உத்தியோகத்தர்களால் | உரிய தரத்திலான நிர்மாணங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

நிராகரிக்கப்பட்டமையின் காரணமாக 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் இந்த கட்டுமானங்கள் விளைவற்று காணப்பட்டன.

### 4.9 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

### 4.9.1 தாமதமான செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| தென் மாகாண கல்வி அமைச்சினால் தென் மாகாணத்தின் பாடசாலைகளின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் அல்லது நிர்மாண நடவடிக்கைகளுக்காக பாடசாலையொன்றிற்கு ரூபா 02 மில்லியன் படி 80 பாடசாலைகளுக்கு ரூபா 160 மில்லியன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. புதுப்பித்தல் மற்றும் நிர்மாண பணிகள் 2019 மார்ச் மாதமளவில் நிறைவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2019 மே 07 ஆந் திகதியில் உள்ளபடியான பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையில் பணிகளை ஆரம்பித்திராத பாடசாலைகள் 14 மற்றும் பணிகளை நிறைவு செய்த செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவான பாடசாலைகள் 28 காணப்பட்டமையால் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | பணிகளை ஆரம்பித்திராத செயற்திட்டத்தை ஆரம்பித்து நிறைவு செய்ய மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் குறைவான செயற்திட்டங்களை துரிதமாக நிறைவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பில் செயன்முன்னேற்ற அறிக்கைகளை வருவித்தல் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது. செயன்முன்னேற்றத்தினை முன்வைத்திராத அதிபர்களை அழைத்து உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 4.9.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதம அமைச்சினால் 2016 ஆம் ஆண்டின் மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் அம்பலங்கொட திலக்கபுர நீர் உத்தேச முறையமையின் நிர்மாணங்கள் கடடந்த ஆண்டின் யூன் 07 ஆந் திகதி ரூபா 2,743,937 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், பணி நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி யூன் 30 ஆகும். எனினும், கடடந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாத்திரம் நாட்கள் நீடிப்பு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் மார்ச் 13 ஆந் திகதி ரூபா 411,552 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் போது தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிராததுடன், குறித்த செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. | பணியை இடைநடுவில் நிறுத்தியமை தொடர்பில் தேடிப் பார்த்து அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் செயற்திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த காலப்பகுதிக்குரிய தாமத கட்டணங்களை பிடிகாசுத் தொகையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மாகாண கடற்றொழில் அமைச்சினால் ரூபா 1,732,993 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ருவினிகம பல்கைத்தொழில் பயிற்சி நிலையம் 2016 யூலை 07 ஆந் திகதி கைத்தொழில் அபிவிருத் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், புதுப்பித்தலுக்காக அதிகாரசபையும் ரூபா 1,499,857 தொகை செலவிட்டிருந்தது. எவ்வாறெனினும், பயிற்சி | பல கைத்தொழில் பயிற்சி நிலையத்தினை உரிய பணியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டினுள் இந்த நிலையத்தினை ஆக்கபூர்வமான நிறுவனமாக மாற்றும் நோக்கில் பைகளின் உற்பத்தி கைத்தொழிற்சாலையொன்றினை தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நிலையம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித பணிக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மீளர்வாண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,059,485 தொகையான 03 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. சங்கங்களால் உரிய காலப்பகுதியினுள் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. சங்கங்கள் தமது பணிகளை புறக்கணித்தல் தொடர்பில் சங்கங்களால் பரிந்துரைக்கப்படும் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கும் அந்த சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கங்களால் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் உரிய பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**4.9.3 நோக்கத்திற்கு புறம்பான செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட போகபெலஸ்ஸ நெசவு நிலையம் புதுப்பிக்கப்பட்டு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நிலையமொன்றினை உருவாக்குவதற்கு 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ரூபா 13,184,083 தொகை செலவிடப்பட்டிருந்தது. பின்னர் அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் பணிகளின் கீழ் கொள்ளப்படாத சுற்றுலா விடுதியொன்றுக்காக இந்த நிர்மாணங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | அதிகாரசபை தாபிக்கப்பட்ட நோக்கிற்கமைய செயற்பட வேண்டும். | 2014 ஆம் ஆண்டின் போது போகபெலஸ்ஸ நிலையத்தினை சுற்றுலா விடுதியொன்றாக புதுப்பிப்பதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. |
| (ஆ) | சமனான அபிவிருத்தி செயற்திட்டதின் கீழ் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் கடந்த வருடத்தின் போது உள்ளுராட்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 8,800,000 தொகையில் ரூபா 4,302,225 தொகை செயற்திட்டத்தின் நோக்கங்களிலிருந்து விலகிய பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கமைய செயற்பட வேண்டும். | இந்த நிதியேற்பாடுகளில் உள்ளுராட்சி நிறுவனங்களின் வீதி அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த தொகை அந்த பணிக்காகவும், எஞ்சியவை ஏனைய அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. |

## 4.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாணத்தின் கல்வி அமைச்சின் ஹபராதுவ தொகுதியின் கல்வி அலுவலகத்திற்கு 2016 யூலை 29 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 72,675 தொகையான ஒலிப்பொருக்கி தொகுதி பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. | சொத்துக்களிலிருந்து அதி உச்ச பயன்பாட்டினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஆ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய 55 ஏக்கர்களில் அமைந்துள்ள ஹுங்கம சமோதான பண்ணையினுள் 11 ஏக்கர்கள் அளவான நிலப்பிரதேசம் தொடர்ந்தும் எவ்வித பணிக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 20 மாடுகளை கட்டி வைக்கக்கூடியதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த மாட்டுக் கொட்டகையொன்றும் விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்களிலிருந்து அதி உச்ச பயன்பாட்டினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்வரும் காலங்களில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய சாலிமவுன்ட் கைத்தொழிற் பேட்டையின் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் பிரதான மண்டபம் மற்றும் அதனோடு இணைந்த அறைகள் 03 ஒரு வருடத்திற்கு முன்னர் ரூபா 2,899,471 செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களிலிருந்து அதி உச்ச பயன்பாட்டினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த சாலிமவுன்ட் கைத்தொழிற் பேட்டையின் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் அலுவலக பணிகள் மற்றும் தொழிற்சாலையின் கூட்டங்களுக்காக பயன்படுத்தப்படுவதுடன், கைத்தொழிற்பேட்டையில் நிலவிய தண்ணீர் பிரச்சினையை தீர்த்தலும், பயன்பாட்டிற்கு உகந்த நிலைக்கு உள்ளாக்குதலுடன், மேற்படி கட்டிடத்தினை எஞ்சிய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4.11 பதவியணியினர் நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபை உத்தியோகத்தர்களின் 4,392 ஆன வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகை உத்தியோகத்தர்கள் 59 பேரின் பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகைகளை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தென் மாகாண கல்வி அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கை 2013.01.01 ஆந் திகதி முதல் நடைமுறையில் உள்ளது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டளவில் சுமார் 06 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் மாகாணத்தினுள் கல்வித் துறையில் ஏற்பட்ட சேவை தேவைப்பாடுகளுக்கமைய ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளன. |
| (ஆ) | மாகாண சபையினுள் அமைய/பதிலீட்டு/ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 892 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கமைய ஆட்சேர்ப்புகள் இடம்பெற வேண்டும். | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் கீழ் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் இது வரையிலும் நிறைவு பெற்றிராததுடன், அந்த அடிப்படைகளில் உள்ள உத்தியோகத்தர்களும் இதன் கீழ் உள்ளனர். |

## 4.12 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கடற்றொழில் அமைச்சினால் கடந்த வருடத்தில் பெறுகை நடைமுறைக்கு புறம்பாக 21,355 பழக் கன்றுகள் ரூபா 1,554,490 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கட்டளையிடப்பட்ட கன்றுகளுக்கு பதிலான விநியோகிக்கப்பட்ட கன்றுகளுக்காக ரூபா 695,120 தொகை | பெறுகை நடைமுறைகளுக்கமைய செயற்பட வேண்டும். | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன், மேலதிக பழக் கன்றுகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது கன்றுகளை கொள்வனவு செய்யும் போது பெறுகை தீர்மானங்களுடன் இணங்காத வகையில் ரூபா 861,730 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

5. **கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

5.1 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 25 செலவினத் தலைப்புகளின் தேறிய நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகையான ரூபா 3,494,775,957 நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தது. | நிதியேற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். | 5 சதவீதத்தை விட சேமிப்புகளுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், எதிர்காலத்தில் நிதியோற்பாடுகளை ஒதுக்கீடு செய்யும் போது தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி நிதியேற்பாடுகளை கோருமாறும் சேமிப்புகள் குறையும் வகையில் செயற்படுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**5.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

**அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் தென் மாகாண சபையினால் தமது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருந்த போதிலும், தென் மாகாணத்தின் பிரதான அமைச்சு மற்றும் கடடற்றொழில், விலங்கின உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் நடவடிக்கைகள், கிராமியக் கைத்தொழில், மின்வலு மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட பணிகளை வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கியிராததுடன், அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்குரிய பணிகள் அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த இணைப்பொன்று ஏற்படுத்தி மாதாந்த செயன்முன்னேற்ற கூட்டங்களை நடாத்தி தற்போதைய நிலைமையை மேம்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளளேன். |
| (ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்காக ஆயத்தமாகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த இணைப்பொன்று இல்லாதிருந்தமையால் இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக திட்டங்களை தயாரிக்கும் போது மற்றும் முன்னாயத்த நடைமுறை மிகவும் மந்தமான மற்றும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | | |